# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## <u>ஆணை நாள் - 01.09.2026</u>

## <u>முன்னிலை</u>

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)

### மாநில தகவல் ஆணையர்

*****

### <u>வழக்கு எண். SA 1038/SCIC/2024</u>

Ms. PRABA - மேல்முறையீட்டாளர்
No.8/204, Muthu Mariyamman Kovil Street
Annai Sathya Nagar
Landmark:Agaramthen Lake
Kanchipuram District - 600 126.
Phone: 87545 68372.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர்
சட்டம் மற்றும் ஒழுங்கு
பள்ளிக்கரணை காவல் மாவட்டம்
மேலகோட்டையூர், சென்னை - 600 127.

## <u>ஆணை</u>

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **07.11.2023** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 11.12.2023 |
| 3. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 20.12.2023 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 24.01.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 07/11/2023 நாளிட்ட மனுவை The Public Information Officer / T-12, Selaiyur Police Station Chennai-73 அவர்களுக்கு அனுப்பி, அதில் “Sub: My Complaint dated 30-08-2023 & FIR No.307/23 against Shivkumar, Mrs.Devikala & Ronesh on 12/06/2023 - regarding - Please furnish me a copy of the Arrest memo of both A1, A2 & A3.” என்பன போன்று 13 (பதின்மூன்று) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (01/09/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் Ms. PRABA அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012)

விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில், தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, திரு.நெல்சன், காவல் உதவி ஆணையாளர், சேலையூர் சரகம், சென்னை-73 அவர்கள் ஆஜரானார். **ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழான 07/11/2023 தேதியிட்ட மனுவிற்கு, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் எவ்வித தகவலையும் அனுப்பவில்லை எனத் தெரிய வருகிறது. பொது அதிகார அமைப்பினை ஆணையம் எச்சரிக்கிறது. இனிவருங்காலங்களில், மனுதாரர்களின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன் கீழான மனுக்களுக்கு சட்டப்படியான உரிய காலவரையறைக்குள் சரியான, முழுமையான தகவல்களை அளிக்க வேண்டுமென்றும், அவ்வாறு அளிக்கப்படவில்லையெனில், அச்சட்டப்படியான நடவடிக்கையினை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.**

**3. எனவே, பொதுத் தகவல் அலுவலர் / காவல் துணை ஆணையாளர், சட்டம் (ம) ஒழுங்கு, பள்ளிக்கரணை காவல் மாவட்டம் அவர்கள் மனுதாரருக்கு இனம் வாரியான தகவல்களை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, 30/09/2026-க்குள் அதன் நகலினை ஆணையத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. ஆணையத்தின் அழைப்பாணை மனுதாரருக்கு அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகத் தவறியுள்ளார். எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 1038/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர்
சட்டம் மற்றும் ஒழுங்கு
பள்ளிக்கரணை காவல் மாவட்டம்
மேலகோட்டையூர், சென்னை - 600 127.

## மேல்முறையீட்டாளர்

Ms. PRABA
No.8/204, Muthu Mariyamman Kovil Street
Annai Sathya Nagar
Landmark:Agaramthen Lake
Kanchipuram District - 600 126.
Phone: 87545 68372.

RG/Sr.PC